## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.107/2019**

வாக்குமூலம்.பி.வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகதீஷ்வரன் | ஜாதி | |
| த/பெ. | அரியமுத்து | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 37 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 15.11.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் ஆமாம். அழைப்பாணை கொண்டு வந்திருக்கிறேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் சொன்னார். நான் அத்தாணி சரக வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன் என்றால் சரிதான். அத்தாணி சரகத்தில் எத்தனை வருவாய் கிராமங்கள் இருக்கிறது என்றால் 8 வருவாய் கிராமங்கள் இருக்கிறது. அதில் தாவா வழக்கு கிராமமான ஏகணிவயல் கிராமமும் அடக்கம் என்றால் சரிதான். நான் அத்தாணி சரக வருவாய் ஆய்வாளராக கடந்த 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து பணிபுரிந்து வருகிறேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திற்கான விவரம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற விவரம் தெரியும். தாவா சொத்து பாதையாக தான் இருந்தது. அதற்கு பக்கத்தில் பட்டாதாரர் இடம் இருந்தது. அதையும் சேர்த்து பாதையாக பயன்படுத்தி விடுவார்கள் என்று பட்டாதாரர் பூஸ்திதியில் அவரது பட்டா சொத்தை விட கூடுதல் விஸ்தீரணம் ஸ்தலத்தில் பாதையாக இருக்கும் பகுதியை அடைத்துவிட்டார் அது பொதுமக்களுக்கு இடையூறாக இருந்ததால் வட்டாட்சியர் அந்த அடைப்பை எடுக்க சொன்னார். அதன்படி பட்டாதாரரும் அந்த அடைப்பை எடுத்துவிட்டாலும் நீதிமன்றத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். நான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள சம்பவத்தின் போது தாவா இடத்திற்கு வட்டாட்சியர் வந்தாரா என்றால் நான் அந்த சமயம் அத்தாணி சரகத்தில் பணி புரியவில்லை.

3) தாவா சொத்தில் பாதையாக பயன்படுத்தும் பகுதியின் புல எண் என்னவென்றால் 199/4A ஆகும். மேற்படி 199/4A என்பது வருவாய் கணக்கின் படி வாதியின் பெயரில் தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். வாதியின் பெயரில் புல எண். 199/4B, 199/4C, 199/12 ஆகிய புல எண்கள் பதிவாகியுள்ளது. நான் தாவா சொத்தை பார்வையிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். சமீபத்தில் 2 வாரத்திற்கு முன்னால் தாவா சொத்தை பார்வையிட்டேன். பூஸ்திதியில் தாவா சொத்து எப்படியிருக்கிறது என்றால் பாதைதான். அதில் முள்வேலி இருக்கிறது. தாவா சொத்தில் கருவேல மரங்கள் நிறைந்து காணப்படுகிறது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் மேற்படி பாதையை எத்தனை மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்றால் மேற்படி பாதை திருவங்கூர் என்ற ஊரையும் ராயன்வயல் என்ற ஊரையும் தாவா கிராமத்தையும் இணைப்பதால் அந்த பகுதியை சேர்ந்த மக்கள் அந்த பாதையை பயன்படுத்துகிறார்கள்.

4) தாவா வழக்கு 2019 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்சமயம் வரை தாவா வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். நான் மேற்சொன்னபடி முள்வேலி இருக்கும் இடத்தில் எவ்வாறு மேற்கண்ட பகுதி மக்கள் பாதையாக பயன்படுத்துகிறார்கள் என்றால் மாற்று பாதை இருக்கிறது ஆனால் அந்த மாற்று பாதையில் கனரக வண்டிகள் செல்லமுடியாது. கடந்த 2019 ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தில் எந்த கனரக வாகனமும் செல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த ஊரில் நடக்கும் தேர் திருவிழாவிற்கு அந்த பாதை வழியாக தான் தேர் சுற்றிவரும். நான் 2023 ல் பணியில் சேர்ந்த பிறகு தேர்திருவிழா நடந்ததா என்றால் நடந்தது 2023 கிறிஸ்துமஸில் நடந்தது. அந்த தேர் திருவிழாவிற்கும் பாதையாக பயன்படுத்தப்படவில்லை என்றாலும் தாவா சொத்தை எந்த மக்களும் எந்த காலத்திலும் பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும் தாவா சொத்து அடைக்கப்பட்டுதான் இருக்கிறது என்றாலும் சரியல்ல. புல எண். 205 என்பது அறந்தாங்கியில் இருந்து கட்டுமாவடி செல்லும் நெடுஞ்சாலை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பலகையின் படி ஊரகவளர்ச்சி துறையின் கீழ் அறந்தாங்கியில் இருந்து கட்டுமாவடி செல்லும் சாலையில் நான் மேற்சொன்ன திருவங்கூர் ராயன்வயல் கிராமங்களை இணைப்பதற்கான சாலை பணி நடந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) மேற்கண்ட நெடுஞ்சாலை துறை சாலையை தான் ஏகணிவயல் கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 சாலை பதிவேட்டில் தாவா புல எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் ரைஸ்மில் ரோடு என்று எண் மட்டும் குறிப்பிடப்பட்டு கிராம பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. புலவரைபடத்தில் தாவா புல எண் பாதையாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

ஆனால் 100 வருடங்களுக்கு மேல் அது பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு 100 வருடங்களாக பாதை என்று சொல்வதில் பாதை மறைத்ததாக பொது நல வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுமக்கள் பாதையை மறித்ததாக எங்களிடம் புகார் கொடுத்ததாக சொல்வதில் அந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

6) என்னுடைய நிரூபணவாக்குமூலம் 3 வது பத்தியில் தாவா சொத்துக்களில் பூஸ்திதியில் பாதை எதுவும் இல்லை என்றும் 2,3 பிரதிவாதிகள் புதிதாக பாதை எடுக்காமல் விடமாட்டோம் என்று வாதியை மிரட்டிச் சென்றாக கூறுவது பொய்யான சங்கதி என்று நான் குறிப்பிட்டிருப்பது உண்மை தான் என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலம் பத்தி 5 ல் பொதுமக்களை செல்லவிடாமல் முள் வைத்து ஆக்கிரமிப்பு செய்த காரியத்தை பற்றி வர பெற்ற புகாரின் அடிப்படையில் முள் பத்தை குவியலை அகற்றியதாக பத்தி 5 ல் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்கண்ட முள் பத்தை அகற்றிய பிரச்சனை காரணமாக தான் வழக்கு வாதியின் பட்டா சொத்தில் பாதை இல்லாததால் வாதி வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தவிர மாற்றுபாதை இருந்தும் பட்டா இடத்தில் பாதை எடுக்க அரசு அதிகாரிகள் முயற்சிப்பது தவறு என்றால் சரியல்ல.

7) பொதுவாக பட்டா இடத்தில் பாதைக்கு நில கையகப்படுத்த உள்ள நடைமுறைகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் தாவா சொத்தை பொறுத்து எந்த நடைமுறையும் பின்பற்றாமல் பாதை எடுக்க முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எந்த கிராம பொதுமக்களும் நாளது தேதிவரை பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும் அதனால் தான் நாளது தேதிவரை எந்த புகார் மனுவும் எங்களிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதையில் 100 வருடமாக பயன்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் புல வரைபடத்தில் அதன் பற்றிய குறிப்பு இருக்கும் என்றாலும் அவ்வாறு பாதையாக பயன்படுத்தப்படாததால் தான் அவ்வாறு குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. நான்கு ஊர் பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையாக இருந்திருந்தால் அவர்கள் தாவா வழக்கில் ஆஜராகி கட்சி செய்திருப்பார்கள் என்றாலும் அவ்வாறு இல்லை என்பதால் தான் அவ்வாறு கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) வாதிக்கு வேண்டாத சில நபர்களின் தூண்டுதலின் பேரில் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த காலத்திலும் பாதை இருந்ததில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**